# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2327/36 - 2023 අප්‍රේල් මස 12 වැනි බදාදා - 2023.04.12
2327/36 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/2011*
*பணிப்புரை இல. 88*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

10(1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர், சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்புக்காக -

(அ) உற்பத்தியாளரொருவர் அல்லது வியாபாரியொருவர் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5இ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2006 ஆம் ஆண்டு யூலை 12 ஆந் திகதிய 1453/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின் பிரகாரம், ஏற்றுமதி அல்லது இறக்குமதி நோக்கத்துக்காக இலங்கை அரசாங்கத்துடன் அத்தகைய உற்பத்தியாளர் அல்லது வியாபாரியினால் வலிதான உடன்படிக்கையொன்றின் அதிகாரத்தின் கீழல்லாமல் ஏதேனும் மசகு எண்ணெய் அல்லது கிரீஸினை இறக்குமதி செய்தல் அல்லது உற்பத்தி செய்தலானது மேற்கொள்ளப்படுதலாகாது என இத்தால் பணிப்புரை விதிக்கின்றேன். ; அத்துடன்

(ஆ) ஏதேனும் மசகு எண்ணெய் அல்லது கிரீஸ் பொருளின் அலகொன்று பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறித்தளிக்கப்பட்டுள்ள இலக்கத்தினை காட்சிப்படுத்தும் வகையில், அத்தகைய மசகு எண்ணெயின் அல்லது கிரீஸ் கொள்கலன், பொதி அல்லது உறையில் நிலையான அச்சு ஒன்று அல்லது சிட்டையொன்று அத்தகைய பொருளில் அடையாளமிடப்பட்டிருந்தாலொழிய, விற்பனை நோக்கத்துக்காக சேமித்தலோ, விற்பனை செய்தலோ, களஞ்சியப்படுத்துதலோ, பொதியிடுதலோ அல்லது விற்பனைக்காக அல்லது காட்சிப்படுத்தலுக்காக மீள்பொதியிடுதலோ ஆகாது என இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.

**சாந்த நிரியெல்ல,**
தவிசாளர்,
பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை.

கொழும்பு,
*2023, ஏப்பிறல் 12.*

EOG *4-0085*